DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 24/2014 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 5 | Caste | : |
| Name | : பழனிச்சாமி | Calling | : |
| Father / Husband Name | : ஆறுமுகம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 07th April 2025.

---

**(1வது எதிரி இறந்துவிட்டார். 2, 3, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் புதுகீழுவச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்குப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் மகஜர், மாதிரி வரைபடம் என் முன்னிலையில் தயார் செய்யவில்லை. மகஜரில் உள்ள 2 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

---

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

Web Copy

என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ள இடத்தின் அமைப்பு குறித்து எனக்குத் தெரியும் என்றால் சரிதான். வரைபடத்தில் உள்ள சம்பவ இடத்திற்கு நான் சென்றுள்ளேன் என்றால் சரிதான் அதனால், சம்பவ இடத்தின் புஸ்துதி அமைப்பும் அதைச் சுற்றியுள்ள அமைப்புகளும் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மற்றொரு மகஜர் சாட்சியான குமரேசனைத் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் நன்கு பழக்கமுடையவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்பதால் தான் கடந்த 18.04.2013 ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு என் முன்னிலையிலும் குமரேசன் என்பவர் முன்னிலையில் காளையார் கோவில் சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கு எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 07.04.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy